மாயன்
பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Tamil-Cultural Identity: Thaninayagam Adikal

Dr. S. Prabavathi

Assistant Professor, Department of Tamil, Arulmigu Kapaleeswarar Arts and Science College, Chennai, India

Manuscript ID : **MT105A0145**

Volume : **3**

Issue : **4**

Month : **December**

Year : **2023**

Received: 26.10.2023
Revised: 17.11.2023
Accepted: 08.12.2023
Published: 29.12.2023

Pages : 64-80

DOI: 10.5281/zenodo.10442259

ABSTRACT:

In the 1950s, Professor Taninayagam Adigal founded the 'Tamil Literary Association' in Thoothukudi. In it he undertook the work of printing and publishing many Tamil books. As part of this, he published a quarterly called Tamil Culture from February 1952. He himself became the editor of this Journal. For the first three years (1952-1955), the magazine was published by the Thoothukudi Tamil Literary Association with the slogan "A Quarterly Review dedicated to the study and diffusion of Tamiliana". Later, from 1956, it was published by the Academy of Tamil Culture, founded by Thaninayagam Adikal in Chennai.

Thaninayagam Adigal has written about twenty five articles in this magazine. The purpose of this article is to examine how he centralizes Tamil-Cultural Identity in those essays. This article aims to summarize the articles written by him under the categories of culture, education, Tamil literature, Indian thought tradition, personality, and study of Tamil studies and interpret them in descriptive research approach.

KEYWORDS:

Tamil Culture, Thaninayagam Adigal, Tamil Literary Association, Srilanka, Tamil Literature, Tamil Studies

தமிழ்ப் பண்பாட்டு அடையாளம்: தனிநாயகம் அடிகள்

முனைவர் சு. பிரபாவதி
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, அருள்மிகு கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சென்னை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

1950-களில் பேராசிரியர் தனிநாயகம் அடிகள் தூத்துக்குடியில் 'தமிழ் இலக்கியக் கழகம்' என்ற அமைப்பை நிறுவினார். அதில் பல தமிழ் நூல்களை அச்சிட்டு வெளியிடும் பணியினை மேற்கொண்டார். இதன் ஒருபகுதியாகத் தமிழ் கல்சர் (Tamil Culture) என்ற காலாண்டிதழை 1952, பிப்ரவரி மாதம் முதல் வெளியிட்டார். அவரே இதற்கு ஆசிரியராகவும் விளங்கினார். இவ்விதழ் முதல் மூன்றாண்டுகள் (1952-1955) வரை தூத்துக்குடி தமிழ் இலக்கியக்கழகத்தின் சார்பில் "தமிழியல் ஆய்வு மற்றும் பரவலாக்கத்திற்கான காலாண்டு ஆய்விதழ்" (A Quarterly Review dedicated to the study and diffusion of tamiliana) என்ற வாசகத்துடன் வெளிவந்தது. பின்னர், 1956-லிருந்து சென்னையில் தனிநாயகம் அடிகளால் தோற்றுவிக்கப்பட்ட தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தின் (Academy of Tamil Culture) சார்பில் வெளியிடப்பட்டது. இவ்விதழில் தனிநாயகம் அடிகள் ஏறக்குறைய இருபத்தைந்து கட்டுரைகள் எழுதியுள்ளார். அக்கட்டுரைகளில் தமிழ்-பண்பாடு சார்ந்த அடையாளத்தை அவர் எவ்வாறு மையப்படுத்தியுள்ளார் என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அவர் எழுதிய கட்டுரைகளைப் பண்பாடு, கல்வி, தமிழ் நூல், இந்தியச் சிந்தனை மரபு, ஆளுமை, தமிழியல் ஆய்வு என்னும் பிரிவுகளுக்குள் அடக்கி, விளக்கமுறை ஆய்வு அணுகுமுறையில் விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

கருச்சொற்கள்

தமிழ்ப் பண்பாடு, தனிநாயகம் அடிகள், தமிழ் இலக்கிய அமைப்பு, இலங்கை, தமிழ் இலக்கியம், தமிழாராய்ச்சி

முன்னுரை

நாகரிகம், பண்பாடு, கல்வி, வாழ்க்கைமுறை ஆகியவற்றில் தனித்த அடையாளத்தைக் கொண்டுள்ள மொழி தமிழ். அம்மொழியின் வளத்தை உலக

அரங்கில் எடுத்துக்கூறியவர் தனிநாயகம் அடிகள். யாழ்ப்பாணத்தில் கிறித்துவக் குடும்பத்தில் பிறந்த இவர் கல்விப் பணியையும் சமயப்பணியையும் ஆற்றுவதற்காக தமிழ்நாட்டிற்கு வந்தார். திருநெல்வேலி வடக்கன்குளத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியாராகப் பணியாற்றினார். அப்போது தமிழ் மீது ஏற்பட்ட ஆர்வத்தால் 1945 முதல் அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில் தமிழ் பயின்றார். சங்க இலக்கியத்தை தன்னுடைய ஆய்வுக் களமாக எடுத்துக்கொண்டு தமிழர்களின் இயற்கையோடு இயைந்த திணைசார் வாழ்க்கை முறையை விரிவாக விளக்கி ஆய்வேட்டைச் சமர்ப்பித்தார். பன்மொழிப் புலமையாளராக விளங்கினார். உலகநாடுகள் பலவற்றிற்கும் சென்று வந்த அடிகளார், தமிழ் மொழியின் செழுமையை உலகறியச் செய்யவேண்டும் என்ற ஆவல் கொண்டார். அதன்விளைவாக, ஆய்வு நிறுவனங்களையும், ஆய்விதழ்களையும் உருவாக்கி உலக அரங்கில் தமிழ்மொழியின் பெருமையை நிலைநாட்டினார். அவ்வகையில் அவரால் கொண்டுவரப்பட்ட இதழான 'தமிழ்க் கல்ச்சர்' என்னும் இதழின் வழி அவர் அடையாளப்படுத்திய தமிழ் பண்பாட்டை அவருடைய கட்டுரைகள் வழி ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

கீழைத்தேயவியல் - தமிழியல்

இந்தியாவில் உள்ள மொழிக்குடும்பங்கள் அனைத்தும் இந்தோ ஆரிய மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவை என்று வில்லியம் ஜோன்ஸ் வகைப்படுத்தினார். இதனை எதிர்த்து தென்னிந்திய மொழிக்குடும்பம் இந்தோ ஆரிய மொழிக்குடும்பத்திலிருந்து வேறுபட்டது என்றும் அது தனி மொழிக்குடும்பம் என்றும் எல்லீஸ் எடுத்துரைத்தார். இதனைத் தொடர்ந்து கால்டுவெல் திராவிட மொழிக்குடும்பம் குறித்து திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்று ஒரு நூலை எழுதினார். இந்நூல் அதுவரை சமஸ்கிருத மூலத்திலிருந்து கிளைத்த மொழி தமிழ் என்ற சிந்தனையைப் புரட்டிப் போட்டது. இது உலகநாடுகளால் கீழைத்தேயவியல் என்ற பார்வையில் மாற்றத்தை ஏற்படுத்தியது. இந்தியவியல், கீழைத்தேயவியல் ஆய்வுகள் சமஸ்கிருதத்தை மையமிட்டிருந்த சூழலில் தமிழியல் என்றொரு ஆய்வுப் புலம் உண்டு என்பதை உலக அரங்கில் உரத்துக் கூறியவர்களில் குறிப்பிடத்தகுந்தவர் சேவியர் தனிநாயகம் அடிகள். "ஒரு காலத்தில் மேல்நாட்டுப் பல்கலைக்கழகங்கில் சமஸ்கிருதம் பற்றியும் இந்தோ - ஆரிய மொழிகள் பற்றியுமே ஆராய்ச்சி செய்து வந்தனர். இப்பொழுது அந்நிலைமாறித்தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், தமிழ் வரலாறு, தமிழர் பண்பாடு முதலிய பற்றியும் ஆராய்ச்சி செய்கின்ற நிலை இப்பல்கலைக்கழகங்களில் உருவாகி வளர்ச்சி பெற்றிருக்கின்றது."[1] தமிழ் அமைப்புகள், தமிழ் ஆய்விதழ்கள்,

[1] அமுதன் அடிகள், தனிநாயகம் அடிகள், ப. 96

தமிழாராய்ச்சி மாநாடுகள் எனத் தமிழியல் ஆய்வுப் பரப்பை உலக அளவில் விரித்தெடுத்ததில் தனிநாயகம் அடிகளாரின் பங்கு குறிப்பிடத்தகுந்தது.

ஆய்வு அமைப்புகளும் ஆய்விதழ்களும்

தமிழ்நாட்டில் தமிழ்ப்பணியை மேற்கொண்ட தனிநாயகம் அடிகளார், பல தமிழ் அமைப்புகளை உருவாக்கினார். அவற்றின் மூலம், நூல்களைப் பதிப்பித்தல், ஆய்விதழ் வெளியிடுதல் முதலான பணிகளை மேற்கொண்டார். தூத்துக்குடியில் தமிழ் இலக்கியக் கழகத்தையும், சென்னையில் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தையும் தோற்றுவித்தார். பின்னர் உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றம் என்ற நிறுவனத்தை உருவாக்க வேண்டிய தேவையை எடுத்துரைத்து அரசாங்கத்தின் மூலம் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தை உருவாக்கினார். இந்நிறுவனத்தின் மூலம் Journal of Tamil Studies என்ற ஆய்விதழை வெளியிட்டார். தொடர்ந்து அவ்விதழ் வெளிவந்து கொண்டிருக்கின்றது.

தமிழ்க் கல்ச்சர்

1950களில் பேராசிரியர் தனிநாயகம் அடிகள் தூத்துக்குடியில் தமிழ் இலக்கியக் கழகம் என்ற அமைப்பை நிறுவினார். அதில் பல தமிழ் நூல்களை அச்சிட்டு வெளியிடும் பணியினை மேற்கொண்டார். இதன் ஒருபகுதியாகத் தமிழ்க் கல்ச்சர் (Tamil Culture) என்ற காலாண்டிதழை 1952, பிப்ரவரி மாதம் முதல் வெளியிட்டார். அவரே இதற்கு ஆசிரியராகவும் விளங்கினார். இவ்விதழ் முதல் மூன்றாண்டுகள் (1952-1955) வரை தூத்துக்குடி தமிழ் இலக்கியக்கழகத்தின் சார்பில் "தமிழியல் ஆய்வு மற்றும் பரவலாக்கத்திற்கான காலாண்டு ஆய்விதழ்" (A Quarterly Review dedicated to the study and diffusion of tamiliana) என்ற வாசகத்துடன் வெளிவந்தது.

"இந்திய வரலாற்று நூல்களை எடுத்து நோக்குமின். Discovery of India என்றும், History of Indian Literature என்றும், பலபடப் புனைந்து வெளிவரும் ஏடுகளை விரித்துப் பார்மின். மாக்ஸ் முல்லர், வின்றர்னிட்ஸ் போன்றவர் முதலாய், வடமொழி இலக்கியத்தின் பெருமையையே விரித்துக் கூறுவர். அவ்விந்திய இலக்கியங்களின் வரலாற்றிலே தமிழ் இலக்கியத்தைப் பற்றியோ, திராவிட நாகரிகத்தைப் பற்றியோ, ஒரு சொல்லேனும், ஒரு குறிப்பேனும், ஒரு கருத்தேனும் காணக் கிடையா.

இந்தியப் பண்பு, இந்திய நாகரிகம், இந்தியக் கலைகள், இந்திய மொழிகள் என அவர் மொழிவனவெல்லாம் திராவிடப் பண்பு, திராவிட நாகரிகம், திராவிடக் கலைகள், திராவிட மொழிகள் இவற்றையே அடிப்படையாகக் கொண்டவை. ஆயினும், பல்லாண்டுகளாக, நடுவுநிலை கடந்தோர் பலர், இவ்வுண்மையை மறைத்தும், திரித்தும், ஒழித்தும் நூல்கள் யாத்தமையின், இன்று இவ்வுண்மையை எடுத்துக் கூறுவது தானும், மக்கள் மனத்தில் ஐயம் விளைப்பதாக இருக்கின்றது. அங்ஙனம் எடுத்துக் கூறுதற்குத்

தானும் பெரிதும் மனத்துணிவு வேண்டற்பால தாயிற்று. தமிழராகிய நாமும், இந்திய மொழிகளிலே தானும், நம் தமிழை பற்றிய உண்மைகளை இதுகாறும் கூறினேம் அல்லேம்".[2] என்ற அடிகளாரின் கூற்று "தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்ற பாரதியின் வழியில் உருப்பெற்றதாகும். தமிழ்மொழியின் வளத்தினை உலக மொழிகளில் எடுத்துரைக்க வேண்டும் என்ற நிலையில் தமிழ்க் கல்ச்சர் இதழ் முழுதும் ஆங்கிலத்திலேயே வெளியிடப்பட்டது.

எனினும், பரந்த அளவில் படிப்போரிடம் சென்றடைய வேண்டும் என்பது இதழின் குறிக்கோள். ஆசிரியர்கள் மாணவர்கள் ஆகிய இரு தரப்பினருக்கும் பயன்பட வேண்டும் என்னும் ஒரு பெருநோக்கு உள்ளது. இதற்காக இதன் தமிழ்ப் பதிப்பு ஒன்றை வெளியிடக் கழகம் ஏற்பாடு செய்து கொண்டுள்ளது. புதுமையியப் புலமையைத் தமிழ்க் கல்வி உலகிற்கு நல்கும் தமிழறிஞர்கள், தமிழ் அமைப்புகளிடையே கருத்துப் பரிமாற்றத்திற்கும் கலந்துரையாடல்களுக்கும் துணை செய்யும்[3] என்ற நம்பிக்கையில் இருந்த அடிகளார் தமிழில் தமிழ்க்கல்ச்சர் இதழை வெளியிட வேண்டும் என்று நினைத்தது நிறைவேறாமலேயே போனது.

1955-லிருந்து சென்னையில் தனிநாயகம் அடிகளால் தோற்றுவிக்கப்பட்ட தமிழ்ப் பண்பாட்டு கழகத்தின் (Academy of Tamil Culture) சார்பில் தமிழ்க் கல்ச்சர் இதழ் வெளியிடப்பட்டது. தனிநாயகம் அடிகளார் முதன்மைப் பதிப்பாசிரியராகவும், தமிழகம், இந்தியாவின் பிற மாநிலங்கள், இலங்கை, இந்தோனேசியா முதலிய நாடுகள் ஆகியவற்றில் வாழ்ந்த தமிழ் ஆய்வறிஞர்கள் ஆசிரியர் குழுவில் இடம்பெற்றது இதழுக்கு உலகளாவிய தன்மையையும் புதிய பொலிவையும் தந்தது. இதனால் தமிழ்ப் பண்பாடு தமிழக இதழ் என்னும் நிலையிலிருந்து 'பன்னாட்டுத் தமிழ் இதழ்' என்னும் தகுநிலைக்கு உயர்ந்தது.[4]

1959-களுக்குப் பிறகு வெளியான இதழ்கள் காலாண்டிதழ்களாக இருப்பினும் அவற்றிற்கிடைய தொடர்ந்து ஓராண்டு இடைவெளியைக் காணமுடிகின்றது. வ.அய். சுப்பிரமணியத்திடம், "முன்னர்ச் சென்னையில் தோற்றுவித்த தமிழ்ப் பண்பாட்டு கழகமும் அதன் வெளியீடான தமிழ் கல்ச்சரும் மிகவும் செயலிழந்துவிட்டன." பேராசிரியர் தனிநாயகம் அடிகள் கூறியதாக அவர் குறிப்பிடுகிறார்.[5] இதன்மூலம் அக்கழகத்தினையும், இதழையும் தொடர்ந்து நடத்தமுடியாமல் போனது குறித்த அவரது

[2] சத்திய வேத பாதுகாவலன்: யாழ்ப்பாணம் 1951: தமிழ்த்தூது: கட்டுரைக்கொத்து: ஐந்தாம் பதிப்பு: 1998:16,17

[3] காமராசு. இரா, தனிநாயக அடிகளாரின் தமிழியல் பங்களிப்பு, ப. 150

[4] காமராசு. இரா, தனிநாயக அடிகளாரின் தமிழியல் பங்களிப்பு, ப. 150

[5] அமுதன் அடிகள், தனிநாயகம் அடிகள், ப. 12.

வேதனையை அறியமுடிகிறது. இருப்பினும் இதனைச் செயல்படுத்தமுடியாமல் போனதற்கான அடிப்படைக் காரணங்களைத் தெளிவாக அறியமுடியவில்லை. பணமுடையே இதற்கு அடிப்படைக் காரணமாக இருந்தது என்றும் வ.அய்.சு குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.[6]

ஆய்விதழின் அமைப்பு

முதல் பக்கத்தில் ஆய்விதழின் உள்ளடக்கம், ஆசிரியர் உரை, தமிழ் தொடர்பான செய்திகளும் குறிப்புகளும் இடம்பெற்றுள்ளன. அடுத்ததாக ஆய்வாளர்களின் கட்டுரைகள், ஆய்விதழில் பங்களிப்பு செய்தவர்கள் பற்றிய விவரக்குறிப்புகள் மற்றும் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தின் நோக்கம், விதிமுறைகள், இதழ் விற்பனை முதலான செய்திகள் இடம்பெற்றுள்ளன. இந்த அமைப்புமுறையில் பல்வேறு மாற்றங்களும் இதழுக்கு இதழ் செய்யப்பட்டுள்ளன.

கட்டுரையாளர்கள்

1952 தொடங்கி 1966 வரை வெளிவந்த இவ்விதழில் இந்திய மற்றும் உலகநாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட தமிழியல் ஆய்வாளர்களின் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. பி.சி. அலெக்சாண்டர், சுனீத் குமார் சட்டர்ஜி, சர் மார்ட்டிமர் வீலர், எம்.பி. எமனோ, சே.ஆர். மார், ஆர்னோ லேமான், ழான் பிலியோசா, எச். ஈராசு, எ.ஃப். லெக்ரான், ஆந்திரனோவ், இ.சி. நோல்ட்டன், கமில் சுவலபில் உள்ளிட்ட இந்திய, அமெரிக்க ஐரோப்பிய அறிஞர்களின் ஆய்வுக்கட்டுரைகள் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன.

இதில் வெளியான கட்டுரைகள், தமிழ்ச் சமூகப் பண்பாட்டையும், மொழியையும், இலக்கியங்களையும் ஆய்வு களமாகக் கொண்டுள்ளன. மொழி, சங்கப்பாடல்கள், காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள், பிரபந்தங்கள், அகராதிகள், ஆளுமைகள், நூலகங்கள், கல்வி, கற்பித்தல், சமூகவியல், (castes in south India by M. arokiaswami) மொழியியல், மானுடவியல், நாட்டார் வழக்காற்றியல், தொல்லியல், கவிதை, உரைநடை, தமிழ் என்ற மொழி அடையாளத்தை மையமிட்டுத் தமிழ் மொழி வழங்கும் உலகநாடுகளில் உள்ள மொழி, பண்பாடு சார் ஆய்வுகள் முதன்மைபெற்றன.

பேராசிரியர் தனிநாயகம் அடிகள் அவர்கள் இவ்விதழின் ஆசிரியராக Quarterly review என்ற பெயரில் சில ஆய்வுக்களங்களை முன்வைக்கிறார். தமிழியல் ஆய்வின் போக்குகள் குறித்தும் விளக்குகிறார். மேலும், அவ்விதழில் அவர் 24 கட்டுரைகளை எழுதியுள்ளார். இக்கட்டுரைகளில் சில அவருடைய ஆய்வேடுகளில்

[6] மேலது.

இடம்பெற்றதாகவும் சில இவ்விதழுக்காகவே எழுதப்பட்டதாகவும் அமைந்தன. தமிழ்ப் பண்பாடு நின்று நிலைத்தல், தமிழ் கற்பித்தல், ஐரோப்பிய நூலகங்களில் தமிழ்க் கையெழுத்துப் படிகள், தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாட்டுத் தக்கம், இலங்கையில் மொழியுரிமை, தமிழில் அச்சேறிய முதல் நூல்கள், இரா. பி. சேதுப்பிள்ளை, இருபதாம் நூற்றாண்டில் வட்டாரத் தேசியம், சென்னை நகர நாவலாசிரியர், திரு.வி.க.வின் எழுத்துக்களில் இயற்கையும் இயல்பும் போன்ற கட்டுரைகள் வேறெந்த நூலிலோ தொகுப்பிலோ வெளிவராதவை. தமிழ்க் கல்ச்சர் இதழுக்கென்றே எழுதப்பட்டவை.[7]

அவற்றை ஒருவாறு கீழ்க்காணும் பிரிவுக்குள் அடக்கலாம்.

1. **பண்பாடு**

    a.பண்பாட்டு அடையாளம்
    b.தமிழ்ப்பண்பாடு-சிலோன்

2. **கல்வி**

    a.கல்வியாளர்
    b.கற்பித்தல்

3. **தமிழ்நூல்**

    a.தமிழ்நூல் அச்சும் ஆவணமும்
    b.அகராதி

4. **இந்தியச் சிந்தனைமரபு**

    a.இந்தியச் சிந்தனை மரபின் வித்து
    b.இந்தியச் சிந்தனை மரபும் ரோமானிய நடுநிலைக் கோட்பாடு

5. **ஆளுமை**

    a.ரா.பி. சேதுப்பிள்ளை
    b.கல்யாணசுந்தரனார்

[7] அமுதன் அடிகள், தனிநாயகம் அடிகள் ப. 103

6. **தமிழியல் ஆய்வு**

மீதமிருக்கும் அனைத்துக் கட்டுரைகளையும் தமிழியல் ஆய்வு என்னும் பிரிவின்கீழ் அடக்கிவிடலாம்.

1. **பண்பாடு**

பண்பாடு என்றால் என்ன என்பதற்கான விளக்கத்தை அவர் Tamil culture-Its past, Its Present and Its Future with special reference to Ceylon என்ற கட்டுரையில் குறிப்பிடுகிறார். 'Tamil means Sweetness and Culture has been defined as sweetness and light; Tamil and Culture therefore, make a most graceful combination both in language and life'[8].

தமிழ் என்றால் இனிமை, பண்பாடு என்றால் வெளிச்சம் தமிழ்ப் பண்பாடு என்பது இனிமையும் வெளிச்சமும் என்று பொருள்படும் என்கிறார். பண்பாடு என்பது வாழ்க்கை முறை சிந்தனை மற்றும் மனித உணர்வுகள், அழகியல் ஆகியவற்றை ஏற்கும் செய்கை என்று கூறுகிறார். தமிழ்ப் பண்பாடு என்பது நிலம், சூழல், மதங்கள், பழக்கவழக்கங்கள், மொழி, இலக்கியம், வழக்காறு, சட்டங்கள், உணவுகள், விளையாட்டுகள் மற்றும் பொம்மைகள், பனைமரம், நல்லெண்ணெய், காய்கறி ஆகியவற்றால் நிலைபடுத்தப்பட்டுள்ளது.[9] அனைத்தும் அம்மக்களோடு உறவுடையாதாக இருக்குமாயின் அதுவே தமிழ்ப் பண்பாடு என்று தனிநாயகம் அடிகள் இக்கட்டுரையில் குறிப்பிடுகின்றார்.

பகைவரை மன்னித்தல் பண்பாடு எனில், நண்பர்களை மன்னித்தல் அதனினும் சிறந்த பண்பாடு. உனக்குத் தீங்கு இழைத்தோருக்கும் நன்மை செய்தல் பண்பாடு. தாழ்ந்தோரும் அணுகிவரும் அளவுக்குப் பழகுதலும் அத்தகையோருடன் நட்புரிமை பாராட்டுதலும் பண்பாடு. கற்றதெல்லாம் போதாது என எண்ணுதலும், கைம்மாறு கருதாமல் தொண்டு புரிதலும், பெருக்கத்துப் பணிதும், மன்னிக்கும் மனப்பக்குவமும், பிறரைத் துன்புறுத்தாத சான்றாண்மையும் உண்மையையும் நீதியையும் அடிப்படையாகக் கொண்டு தோன்றும் மனத் தூய்மையும், குறுகிய மனப்பான்மையை உருவாக்கும் தாழ்ந்த சிந்தனைகளைப் புறத்தே ஒதுக்கிவிடும் மனத் தாராளமும் ஆகிய இவையெல்லாம் பண்பாடு[10] எனப் பண்பாடு குறித்த மிக விரிவான சிந்தனையை தம் கட்டுரைகளில் ஆங்காங்கே கூறிச் செல்கிறார்.

---

[8] X.S. thani nayagam; Tamil culture-Its past, Its Present and Its Future with special reference to Ceylon; Tamil Culture Vol.IV.No.4, 1955, P.341-364

[9] X.S. thani nayagam; Tamil culture-Its past, Its Present and Its Future with special reference to Ceylon; Tamil Culture Vol.IV.No.4, 1955, P.341-364

[10] X.S. thani nayagam; Indin Thought and Roman Stoicism; Tamil Culture Vol.X.No.3, 1963, P.33

a. பண்பாட்டு அடையாளம்

மேலைநாடுகளில் சமஸ்கிருதத்தை முதன்மைப்படுத்திய அறிவுப்புலமாகக் கீழைத்தேயவியல் புரிந்துகொள்ளப்பட்டது. சமஸ்கிருதமும் ஆரிய மரபும் இந்தியாவின் அடையாளமாகக் கருதப்பட்டன. இப்புரிதல் தவறானது என்று நிறுவுவதற்காகப் பழந்தமிழ் மரபுகள், கிரேக்க, ரோமானிய மரபுகளோடு ஒத்துள்ளமையை எடுத்துக்கூறித் தமிழ்ப் பண்பாட்டை விளக்கினார். தமிழின், தமிழினத்தின் தொன்மையையும் புலமையையும் உலகநாடுகள் அனைத்திற்கும் அடையாளப்படுத்தும் நோக்கோடு செயல்பட்டவர் பேராசிரியர் தனிநாயகம் அடிகள். தமிழ்க் கல்ச்சர் இதழில் அவர் எழுதிய கட்டுரைகளும், அதில் இடம்பெற்ற பிறருடைய கட்டுரைகளும் இதற்குச் சான்றுகளாகின்றன.

இந்தியம்-திராவிடம் என்பதிலுள்ள தமிழ் அடையாள அழிப்பினைச் சுட்டிக்காட்டினார். அவர் எழுதிய Tamil Cultural Influences in South East Asia என்ற கட்டுரை இதற்குச் சரியான சான்றாக இருக்கிறது.

நீலகண்ட சாஸ்திரி எழுதிய இந்திய வரலாறும் பண்பாடும் என்ற நூலில் இந்தியப் பண்பாடாக அவர் கண்டறிந்து கூறியவை பெரும்பாலும் ஆரிய மரபினையே ஆகும். குறிப்பாக, சமஸ்கிருத இலக்கியச் சான்றுகள் வழி கட்டமைக்கப்பட்ட இந்தியப் பண்பாட்டில், திருப்பாவை திருவெம்பாவை பாடல்கள் இரண்டு இடம்பெற்றிருப்பதற்கும் எச்.ஜி. காரிட்ச் வால்ஸ் என்பவர் அதனைத் தன்னுடைய ஆய்வில் பயன்படுத்தியிருந்தமைதான் காரணம் என்கிறார்.

“தமிழகத்தின் கலை மற்றும் சமூக வரலாறுகள் எந்த நிலையிலும் மதிப்பிடப்படவில்லை. கட்டடக்கலை, சிற்பக்கலை மற்றும் பிற கலை வடிவங்களின் தோற்றம் வளர்ச்சி குறித்த ஆய்வு அவரது நூலில் இடம்பெறவில்லை.”[11] வரலாற்று ஆய்வாளர்கள் ஒரு சமூக வரலாற்றை மறந்து, மறைத்து, விடுத்து எழுதும் ஆய்வு நூல்கள் மற்றவரிடையே தவறான புரிதலை ஏற்படுத்தும் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

பரம்பணன், பூ நகர், அஙகூர் வாட், அங்கூர் தோம், சாம் டவர் உள்ளிட்ட பல இடங்களில் தமிழ் பண்பாட்டின் தாக்கத்தைக் காணமுடிவதாகக் குறிப்பிட்டுள்ளார். பேங்காக்கில் திருப்பாவை, திருவெம்பாவை நோன்புகள் த்ரியம்பவாய், த்ரீபவாய் என்று கொண்டாடப்படுவதையும், சில சுவடிகள் அங்குள்ள மியூசியத்தில் உள்ளதையும், தாய்லாந்தில் தய் ரோக்கியன் என்ற பெயரில் ராமாயணம் வழங்கிவருவதையும் எடுத்துக்காட்டுகிறார். இதுபோல் கம்போடியா, மலாயா, இந்தோனேஷியா, ஆகிய

[11] X.S. thani nayagam; Tamil Cultural Influence South East Asia; Tamil Culture Vol.IV.No.3, 1955, P.205

இடங்களிலும் தமிழ் கட்டிடக்கலை குறித்து எழுத்தாளர்கள் எழுதியுள்ளதையும் எடுத்துக்காட்டுகிறார். தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாட்டின் தாக்கம் குறித்த ஒரு ஆய்வுத்துறையை மலேசியப் பல்கலைக்கழகம் விரைவில் தொடங்கவேண்டும் என்ற ஆவலையும் வெளிப்படுத்துகிறார்.

2. தமிழ்ப்பண்பாடும் சிங்களப்பண்பாடும் - சிலோன்

இலங்கையில் தமிழ்ப் பண்பாட்டின் தொன்மை பழங்காலத்திலிருந்தே வருகிறது. புவியியல் மானுடவியல், வரலாற்று, இலக்கியம் மற்றும் மொழியியல் சான்றுகளின் அனைத்து கூறுகளும் தென்னிந்தியகுடிமக்களுடன் இன மற்றும் பண்பாட்டு உறவுகளைக் கொண்ட ஒரு மக்கள் இலங்கையில் இருப்பதை சுட்டிக்காட்டுகிறது[12] என்று குறிப்பிடுகிறார். சில சான்றாதாரங்களைக் கொண்டு சிலோன் பகுதிகளில் தமிழ் மற்றும் சிங்களப் பண்பாடுகள் இருந்தமையை விளக்கிச் செல்கிறார். சேர, சோழ, பாண்டிய அரசர்களுக்கும், சிங்கள அரசர்களுக்கும் இடையே இருந்த தொடர்பையும், சிலோனில் முதலில் அச்சடிக்கப்பட்ட நூல் சிங்கள, தமிழ் மொழிகளில் அச்சடிக்கப்பட்டதையும் எடுத்துக்காட்டுகிறார். சிலோனின் தென்பகுதியான கதிர்காமத்தில் காணப்படும் இந்து, பௌத்த, இஸ்லாமியச் சமயங்களும் வடபகுதியான நைனத்தீவில் காணப்படும் பௌத்தச் சமயத்தையும் அவற்றிற்கு இடையே உள்ள தொடர்பையும் குறிப்பிடுகிறார். சிங்கள இலக்கண நூலான சித்தசங்கராவாத்தில் புத்தமித்திரரின் வீரசோழியத்தின் தாக்கம் இருப்பதாகவும் குறிப்பிடுகிறார். ஆறுமுகநாவலர், சி.வை. தாமோதரம்பிள்ளை முதலானோரின் பதிப்புப் பணியினையும் சுட்டிக்காட்டுகிறார். என். கதிரைவேல்பிள்ளை, குமாரசாமிப் புலவர், விபுலானந்தர், சுவாமி ஞானப்பிரகாசர் முதலானோரின் தமிழியல் பணிகள் ஆகியவற்றின் மூலமும் தமிழ்ப்பண்பாடு சிலோனில் பரவலாகக் காணப்பட்டதை அறியமுடிகிறது. பல்கலைக்கழகங்களிலும், நிறுவனங்களிலும், தமிழ்மொழியின் பயன்பாடு இருந்துள்ளதையும், தமிழ், சிங்களப் பண்பாடுகள் ஒன்றோடு ஒன்று தாக்கம் பெற்றும் வலிமை பெற்றும் சிலோனில் இருந்தமையைக் கட்டுரையில் விரிவாகப் பேசியுள்ளார். இக்கட்டுரை கொலம்பியாவில் தமிழ் பண்பாட்டு மையத்தில் வாசிக்கப்பெற்றது.

a. கல்வியாளர்கள்

தமிழ்ப் பண்பாட்டில் கல்வி-போதனை மரபுகள் குறித்த பண்பாட்டு மானுடவியல் அடிப்படையிலான ஆய்வினை மேற்கொள்ளவேண்டிய தேவை நமக்குள்ளது. இதற்கான முன்முயற்சியைப் பேராசிரியர் தனிநாயகம் அடிகள் தொடங்கிவைத்துள்ளார். Ancient Tamil Literature and the Study of Ancient Indian Education, The Educators of early Tamil Society,

[12] மேலது.

Ancient Tamil Poet-Educator, Earliest Jain and Buddhist Teaching in the Tamil Country ஆகிய கட்டுரைகள் பழந்தமிழ் இலக்கியங்களில் அவர் மேற்கொண்ட ஆய்வின்வழிப் பெறப்பட்ட சில முடிவுகளை முன்வைக்கின்றன.

சங்ககாலத்தில் பெற்றோர்களே கல்வியாளர்களாக இருந்துள்ளனர். சங்க காலத்தின் தொடக்கத்தில் பொதுமைத்தன்மை கொண்டிருந்த கல்வி பின்னர்ச் சமயம் சார்ந்த முறைசார் கல்வியாக மாறியது. காப்பியக் காலத்தில் வேதப் பிராமணர்களும் சமண பௌத்தத் துறவிகளும் முதன்மைக் கல்வியாளர்களாயினர்.

கல்வியாளர்களை நான்கு நிலைகளில் வகைப்படுத்துகிறார்.

1. பூசாரிகள், 2. பாணர்கள், 3. புலவர்கள், 4. தத்துவஞானிகள்

பூசாரிகள் குறிசொல்லல், விரிச்சி உரைத்தல், சடங்கு, ஆடல் எனப் பலதரப்பட்ட செயல்களைச் செய்பவராக இருந்துள்ளனர். இவர்கள் கூறும் ஆணைகளை மக்கள் மதிப்புடன் பின்பற்றிவந்துள்ளனர். தமிழில் வேலன் வெறியாட்டு நிகழ்வினைச் சான்றாக எடுத்துக்காட்டியுள்ளார் அடிகள். இப்பண்பாடானது கிரேக்க, ரோமானிய, செல்டிக் இனப் பண்பாட்டோடு ஒப்புநோக்கத்தக்க அளவில் உள்ளதையும் விளக்குகிறார்.

பாணர்கள் இரண்டாம் கட்டக் கல்வியாளர்களாக இருந்துள்ளனர். இவர்கள் அரசனின் வீரத்தையும், வள்ளல் தன்மையையும், விருந்தோம்பலையும் புகழ்ந்து பாடுவோராக இருந்துள்ளனர். பொது இடங்களில் ஆடியும் பாடியும் இசைத்தும் மக்களை மகிழ்வித்திருக்கின்றனர். ஊர்ஊராகச் சென்று செய்திகளைப் பரப்புபவராகவும் இருந்துள்ளனர். பிற்காலத்தில் பாணர்களின் இடத்தைப் புலவர்கள் பெற்றனர்.

புலவர்கள் மூன்றாம்கட்ட கல்வியாளர்களாக இருந்துள்ளனர். ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒரு கல்வியாளர் மரபு உருவாகினாலும், பழைய கல்வியாளர்களும் இவர்களுடைய காலத்தில் இருந்துள்ளனர். ஆனால் அவர்கள் செய்து வந்த பணிகள் மாற்றமடைந்துள்ளன. புலவர்கள் மாணவர் குழுக்களுக்கு ஆசிரியர்களாகவும், பொதுமக்களுக்குத் தகவலாளிகளாகவும் இருந்துள்ளனர். புலவர்கள் அரசர்களுக்கு நண்பர்களாகவும் ஆலோசகராகவும் இருந்துள்ளனர். கல்வியானது உயர்குடி மரபுடன் இணைந்ததாகக் கருதப்பட்டது. தொழில்நிலை சார்ந்து முறைசார் கல்வியும் அதற்கான வாய்ப்புகளும் இக்காலத்தில் பெருகத்தொடங்கின. செல்வம், வறுமை, வரிவிதிப்பு, வணிகம், போர், அமைதி, நல்லாட்சி பற்றிய விளக்கங்களைப் பாடுபொருளாகக் கொண்டனர். கவிதை, சிந்தனை, ஆய்வு, நீதியுரைத்தல், வாழ்த்துக் கூறல் என்பவை புலவர்களுக்கான பணியாக அடையாளம் கண்டது. இருப்பினும், புலவர்கள் பாடிய பாடல்கள் பாணரை முன்னிறுத்திப் பாடுவது போலவே அமைக்கப்பட்டன. இவ்வாறு ஆற்றுப்படை நூல்கள் தோற்றம் கொண்டன. பேராசிரியர் தனிநாயகம் அடிகளின்

இக்கட்டுரை பாணர் புலவர் ஆகியோரைக் கல்வியாளர்களாக அடையாளப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் காலப்போக்கில் ஏற்பட்ட பண்பாட்டு வளர்ச்சி மாற்றங்களையும் விளக்குகிறது. இம்மூன்று காலகட்டங்களிலான கல்வி சமயச் சார்பற்றதாக இருந்தது. சிலப்பதிகாரம், மணிமேகலை, ஆகிய நூல்கள் வேதப் பிராமணிய, தத்துவியல் கல்வியாளர்கள் உருவாகிவிட்ட சூழலைக் காட்டுகின்றன.

வேதம் பாடமாகவும் பிராமணர்கள் கல்வியாளர்களாகவும் இருந்துள்ளனர். அதேசமயம் அவைதீக சமயங்களான சமண, பௌத்த, ஆசீவகச் சமயங்கள் உலகாயத இன்பவாதச் சிந்தனைப் பள்ளியின் வழி நீதிகளைப் போதிக்கத் தொடங்கியமையையும் விளக்குகிறார். இதன்வழிப் பண்டைத் தமிழ்ச்சமூகத்தில் கல்வியாளர்களாக இருந்தவர்கள் சமயம் சாரா பொதுத்தன்மை கொண்ட முறைசாராக் கல்வி முறையினையும், அடுத்தகட்டத்தில் வைதீக அவைதீக சமய நிறுவனங்களின் வருகைக்குப் பின்பான முறைசார் கல்வி முறையினையும் விரிவாக ஐந்து கட்டுரைகளில் விவாதிக்கிறார்.

b. கற்பித்தல்

பேராசிரியர் தனிநாயகம் அடிகள், இந்தியப் பள்ளிக்கல்வி இயக்கம் 1954-ல் அளித்த அறிக்கையில் கல்வியியல் தொடர்பாக அவர்கள் குறிப்பிட்டிருந்த சில குறைகளை எடுத்துக்காட்டி, அது மொழிக் கல்வியில் எந்த அளவிற்கு உண்மையானதாக இருக்கிறது என்பதனையும், ஒரு மொழியினைக் கற்பிப்போருக்கு இருக்க வேண்டிய தகுதிகள், தரமான பாடத்திட்டங்கள் முதலானவை குறித்த தமது கருத்தையும் The Teaching of Tamil என்ற கட்டுரையில் முன்வைக்கிறார்.

முதலில் கல்வி இயக்கம் முன்வைத்த, “எந்தவித ஆர்வமும், படைப்பாக்க உணர்வும் கல்வியியல் மறுமலர்ச்சியில் முதன்மை பெறவில்லை.”[13] கூற்றினை முன்னிலை படுத்தி இது எல்லா ஆசிரியர்களுக்கும் பொதுவான கூற்று. இது தமிழ் மொழி கற்பிக்கும் ஆசிரியர் மற்றும் விரிவுரையாளர்களுக்கும் ஓரளவு பொருந்தும் என்று ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.

தமிழினைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குத் தமிழ் மொழி தெரிந்துள்ளதே தவிர, அதைக் கற்பிக்கும் அளவிற்கான பயிற்சி அவர்களிடம் காணப்படுவதில்லை என்கிறார். ஒருமொழி ஒருவருக்குத் தாய்மொழியாக இருக்கும் பட்சத்தில் அவர் அதில் புலமை பெற்றிருக்க வேண்டிய அவசியமில்லை என்ற எண்ணம் சிலோன் பகுதிகளில் உள்ள கல்விக்கூடங்களில் கருதப்படுகின்றது. “ஒருவருக்கு ஒரு மொழி தாய்மொழியாக

[13] The Teaching of Tamil; Tamil Culture; 1954; Vol. III,No.1 p.10

அல்லது வட்டார மொழியாக இருந்தாலும் அவர்கள் மொழியினைக் கற்பிக்கும் முறையினைக் கண்டிப்பாக அறிந்திருக்க வேண்டும்."[14]

பாடத்திட்டங்களுக்காக உருவாக்கப்படும் புத்தகங்கள் பொது வாசிப்புக்கு உகந்த புத்தகங்களாகவும், நூலகங்களில் உள்ள புத்தகங்களாகவும் இருக்கின்றன. கல்வி இயக்கம் சொல்வதுபோல், அவை அறிவியல் அணுகுமுறையிலான தொகுப்புகளாகவோ, படைப்புகளாகவோ இருக்கவில்லை. முதலில் பாடத்திட்டங்களில் மாற்றங்களை மேற்கொள்ளவேண்டும்.

"பள்ளி கல்லூரிகளில் மொழி கற்பித்தல் என்பது நலிந்த சாதாரண நிலையிலேயே உள்ளது. சிறந்த தமிழ் ஆசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள், சமகால ஆய்வுப் போக்குகளையும் அதற்கான புதிய சொல்லாடல்களையும் அறிந்து அதன்மூலம் மொழியினைக் கற்பிக்கவேண்டும். இதுவே வருங்காலத்தில் தமிழ் மொழியின் இருப்பினை உறுதிசெய்யும்."[15] என்கிறார். தாய்மொழிக் கல்வியின் தேவையையும் தரத்தையும் உறுதிசெய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

a. தமிழ் நூல்கள்: அச்சும், ஆவணமும்

அச்சு ஊடகத்தின் வருகையும் அதன் பயன்பாடும் தமிழ்ச் சமூக வரலாற்றில் பெரும் மாற்றத்தை உண்டாக்கியது. தமிழ்ப் பண்பாட்டில் கிறித்துவ மதப் பரவலாக்கத்திற்கு அடிப்படையாக விளங்கியது தமிழ் மொழி. எனவே பல பாதிரிமார்கள் தமிழ் மொழியினைக் கற்று அதன்மூலம் அவர்களது கொள்கைகளை வினா விடைகளாக, வசனங்களாக அச்சிட்டு வெளியிட்டனர். அவை துண்டுப்பிரசுரங்களாகவும் நூல்களாகவும் இருந்தன.

தமிழ் மொழியினைக் கற்பதற்கான அடிப்படை இலக்கணமும், தமிழ் வார்த்தைகளின் கோவையும் அவர்களுக்குத் தேவைப்பட்டதால், பல தமிழ் இலக்கண வினாவிடை நூல்களும், அகராதிகளும் உருவாக்கப்பட்டன. இதனால் தமிழ்-போர்த்துக்கீஸ், ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் முதலான உலகநாடுகளின் அனைத்து மொழிகளிலும் அகராதிகள் உருவாயின. தமிழ் மொழியில் புலமை பெற்ற பின் அதில் உள்ள இலக்கியங்களை மொழிபெயர்க்கும் முயற்சியிலும் பலர் ஈடுபட்டதை வரலாறுகள் வழி அறியமுடிகிறது.

[14] The Teaching of Tamil; Tamil Culture; 1954; Vol. III, No.1 p.11
[15] The Teaching of Tamil; Tamil Culture; 1954; Vol. III, No.1 pg17

பேராசிரியர் தனிநாயகம் அடிகள் முதன்முதலில் தமிழில் அச்சடிக்கப்பட்ட நான்கு புத்தகங்களை The first books printed in Tamil[16] என்ற ஆய்வுக்கட்டுரையில் அறிமுகப்படுத்துகிறார். அந்நூல்கள் எங்கு, யாரால், எந்த மொழியில் பதிப்பிக்கப்பட்டன என்பதையும், அவற்றின் உள்ளடக்கங்களையும், அந்நூல்கள் தற்பொழுது எங்கு உள்ளன என்ற தகவலையும் தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

1. இந்தியாவில் முதன்முதலாக 1956-ல் ஐரோப்பாவிலிருந்து கோவாவிற்கு லத்தீன் எழுத்துகளைக் கொண்ட அச்சியந்திரம் வரவழைக்கப்பட்டது. ஆனால் முதல் தமிழ் அச்சுப்பதிப்பு போர்ச்சுக்கலின் தலைநகரான லிஸ்பனில் 11.02.1554-ல் நடந்தேறியது. Carthilha என்ற 36 பக்கங்களைக் கொண்ட துண்டுப்பிரசுரம் அச்சடிக்கப்பட்டது. இது லத்தீன் எழுத்துகளால் அச்சடிக்கப்பட்ட தமிழ் நூல். இதனை வின்சென்ட் து நசரெத், ஜார்ஜ் கார்வல்லோ, தோமா து குருஸ் ஆகிய மூன்று இந்தியர்கள் எழுதியுள்ளனர். இத்துண்டுப்பிரசுரம் ஃப்ரா ஜோம் என்பவரின் மேற்பார்வையின் கீழ் உருவாக்கப்பட்டது.
2. 20.02.1578-ல் Doctrina chiristam en lingua malauar tamul or தம்பிரான் வணக்கம் என்ற நூல் குயிலான் (quilon) என்ற இடத்தில் அச்சடிக்கப்பட்டுள்ளது. 16 பக்கங்களைக் கொண்ட இந்நூல்தான் முதன்முதலில் தமிழ் எழுத்தில் அச்சடிக்கப்பட்டது. இந்நூலினை ஹென்றிக் ஹென்றிகே மற்றும் மானுவேல் து சோ பெத்ரோ என்பவரும் இணைந்து எழுதியுள்ளனர். இந்நூல் லண்டனில் உள்ள ஹார்வர்டு காலேஜ் நூலகத்தில் உள்ளது.
3. 14.11.1579-ல் Doctrina chiristam கிரீசித்தியானி வணக்கம் என்ற நூல் கொச்சினில் அச்சடிக்கப்பட்டது. 120 பக்கங்களை உடைய இந்நூல் ஹென்றிக் ஹென்றிகே என்பவரால் வெளியிடப்பட்டது. தமிழிலிருந்து போர்த்துக்கீச மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்ட சமய வினாவிடை தொகுப்பாக இந்நூல் உள்ளது. இது பிரான்ஸில் உள்ள பிரெஞ்சு உள்ளதாகக் குறிப்பிடுகிறார்.
4. 1586-ல் "Flos sanctorum" o libro de la vidas di algunos santos trasladas en lengua malauar என்ற நூல் தூத்துக்குடி அல்லது புன்னைகாயிலில் பதிப்பிக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. 669 பக்கங்களை உடைய இந்நூலினையும் ஹென்றிகே என்பவரே எழுதியுள்ளார். இந்நூல் வாடிகன் நகர நூலகத்தில் உள்ளதாகக் குறிப்பிடுகிறார்.

இந்நான்கு நூல்களும் முழுக்க முழுக்க கிறித்துவச் சமயம் சார்ந்த நூல்களாகவே உள்ளன.

[16] Tamil Culture; Vol. VII, No.3.

தென்னிந்தியா மற்றும் சிலோனோடு அரசியல், வணிகம், சமயத் தொடர்புடையவையாகப் போர்ச்சுக்கல், பிரான்ஸ், இத்தாலி, இங்கிலாந்து, ஹாலந்து, டென்மார்க், மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் இருந்தன. அக்காலத்தில் இங்கிருந்த பல சுவடிகளும் பதிப்பிக்கப்பட்ட நூல்களும் இடம்பெயர்ந்தன. அவை இன்று அவ்வந் நாட்டிலுள்ள பொது நூலகங்களிலும் சில தனி நபர்களிடமும் இருக்கலாம். அவற்றை அறிந்து தொகுத்து ஆவணமாக்கவேண்டும் என்னும் முயற்சியினைத் தனிநாயகம் அடிகள் மேற்கொண்டார். இதனைத் தமிழ்க்கல்ச்சர் இதழில் Tamil Manuscripts in European Libraries[17] தலைப்பில் எழுதியுள்ளார்.

அதன்படி, போர்ச்சுக்கல் நூலகத்தில் உள்ள சில தமிழ் நூல்களையும், பிரெஞ்சு நூலகத்தில் உள்ள தொல்காப்பியம், திருக்குறள், கம்பராமாயணம், இசை, நாடகம், வயித்தியம், சில பிரபந்தங்கள் உள்ளிட்ட நூல்களையும், வாடிகன் சிட்டியில் உள்ள நூலகத்தில் தமிழ் வார்த்தை கோவை,பஞ்சாங்கம், சில பிரபந்தங்கள் ஆகியவற்றையும் கண்டறிந்து ஆவணப்படுத்தியுள்ளார். வாடிகன் சிட்டி நூலகத்தில் உள்ள நன்னூல் மொழிபெயர்ப்பு நூல் குறிப்பிடத்தக்கது. இந்நூல் பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் 1878-ல் பதிப்பிக்கப்பட்ட நூல்.

இவ்வாறு உலகநாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்வோர் அங்குள்ள நூலகங்களில் இருக்கும் தமிழ்ச் சுவடிகள், நூல்களின் தகவல்களைத் திரட்ட முயற்சி செய்யவேண்டும் என்ற வேண்டுகோளினையும் முன்வைக்கிறார்.

1679-ல் பதிப்பிக்கப்பட்ட தமிழ் போர்த்துக்கீச அகராதியினை அறிமுகம் செய்கிறார். இதன் அமைப்பு முறையினையும் மொழிப் பயன்பாட்டையும் விளக்கிச்செல்கிறார். தமிழ்ச்சொல்லுக்கு இணையான போர்த்துக்கீசியச் சொல்லை வரிசைப்படுத்தியுள்ள முறையினையும் அதில் உள்ள சிக்கல்களையும் எடுத்துரைக்கிறார். சான்றாக, u மற்றும் v எழுத்துகள் வேறுபாடின்றிப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனப் பலவற்றைக் குறிப்பிடுகிறார்.

4. இந்தியச் சிந்தனை மரபு

இந்தியச் சிந்தனைமரபு கி.மு 6 ஆம் நூற்றாண்டிலிருந்து தொடங்குகிறது. மரபார்ந்த நம்பிக்கைகளையும், தத்துவங்களையும், சமயங்களையும் கேள்விக்கு உட்படுத்துவதிலிருந்து இந்தியச் சிந்தனை மரபினை முன்னெடுக்கலாம். ரோமானிய நடுநிலைக் கோட்பாடும் இந்தியச் சிந்தனை மரபும் என்னும் தலைப்பிலும் கட்டுரை எழுதியுள்ளார். இதன்மூலம் மானுடவியல் அடிப்படையில் இந்தியச் சிந்தனை மரபை விளக்கியுள்ளார்.

[17] Tamil Culture; Vol. III, No.3.

5. ஆளுமைகள்

ரா. பி . சேதுப்பிள்ளை அவர்களுக்கான நினைவேந்தலாகத் தனிநாயகம் அடிகள் தமிழ்க் கல்ச்சர் இதழில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அதில் ரா.பி. சே வின் பிறப்பு தொடங்கி அவருடைய தமிழியல் பணிகள் அனைத்தையும் அனுபவப் பகிர்வாக்கி எழுதியுள்ளார். அவர் எழுதிய ஊரும் பேரும், கடற்கரையிலே, ஆற்றங்கரையிலே, முதலான நூல்கள் குறித்தும் அவர் எழுதிய கட்டுரைகள் குறித்தும் சில நினைவுகளைப் பகிர்ந்துகொண்டுள்ளார்.

6. தமிழியல் ஆய்வுகள்

இத்தலைப்பின் கீழ் மேற்கண்ட பகுப்புக்குள் அடங்காத கட்டுரைகள் அனைத்தும் இடம்பெறுகின்றன. The Tamil said it all with flowers, The novelist of the city of madras, Apperception in Tamil literary studies முதலான கட்டுரைகளைக் குறிப்பிடலாம்.

தமிழியல் ஆய்வுக்கான நூற்பட்டியலைத் தொகுக்கும் பணி மலேசியப் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம் புத்தகங்கள், இதழ்களில் வெளியான தமிழியல் ஆய்வுகள் தொடர்பான கட்டுரைகளை அடைவு செய்ய முயன்றுள்ளனர். தமிழல்லாத பிறமொழிகளில் எழுதப்பட்ட தமிழியல் ஆய்வுகளின் பட்டியல் தொகுப்புகளை உருவாக்கும் முயற்சியாகும். இதுகுறித்த தகவல்களை அறிந்தோர் தெரிவிக்கலாம் என்ற வேண்டுகோளோடு இவ்விதழில் ஆசிரியர் குறிப்பினை எழுதியுள்ளார் தனிநாயகம் அடிகள். ஆனால் இம்முயற்சி நிறைவேறியதாகத் தகவல்கள் எதுவும் இல்லை.

முடிவுரை

- ஒட்டுமொத்தத் தமிழியல் அறிஞர்களை ஒருங்கிணைத்து வெளிவந்த ஆய்விதழாகத் தமிழ்க்கல்ச்சர் இதழினை அடையாளப்படுத்தலாம்.
- இவ்விதழில் வெளியான கட்டுரைகள் யாவும் உலகம் முழுவதும் உள்ள இந்தியவியல் அறிஞர்களுக்குத் தமிழியல் குறித்த புரிதலை ஏற்படுத்த அடிப்படையாக அமைந்தன.
- கீழைத்தேயவியலில் திராவிட மொழி ஆய்வுகளைக் கால்டுவெல், எல்லீஸ் முதலானோர் முன்னெடுத்தனர். அதேசமயம் தமிழியல் ஆய்வுகளை முன்னெடுத்த பெருமை பேராசிரியர் தனிநாயகம் அடிகளையும், அவரது தமிழ்க் கல்ச்சர் இதழையுமே சாரும். இதன்மூலம் தேசிய (ஆரிய) அடையாளத்திலிருந்து தமிழ் அடையாளம் கண்டறியப்பட்டது.

- உலக அரங்கில் தமிழ் மொழியும் அதன் பண்பாடும் தொன்மையானது, என்பதை நிறுவக் கிரேக்க ரோமானிய நாகரிகங்களோடு ஒப்பிட்டு விளக்கியுள்ளமை குறிப்பிடத்தகுந்தது.
- தமிழ்ப் பண்பாட்டு அடையாளத்தை மீட்டெடுத்தல், பிற பண்பாட்டோடு ஒப்பிட்டு ஆராய்தல், பண்பாட்டு தாக்கங்களைக் கோடிட்டுக்காட்டுதல் ஆகிய சிந்தனைகளைத் தனிநாயகம் அடிகள் அவர்களின் கட்டுரைகளில் காணமுடிகின்றது.
- இந்தியச் சிந்தனை மரபை விரிவாக விளக்குவதோடு பிற நாகரீகக் கோட்பாடுகளோடு இந்தியச் சிந்தனை மரபினையும் இணைத்து ஆராய்ந்துள்ளமை கவனிக்கத்தக்கது.
- தனிநாயகம் அடிகள் அவர்கள் பன்மொழிப் புலமையாளர். அவர் மொழியை வெறும் மொழியாக மட்டுமே கற்கவில்லை. அம்மொழிசார் பண்பாட்டோடு இணைந்தே கற்றுள்ளார் என்பதை அவருடைய கட்டுரைகளின்வழி அறியமுடிகின்றது.
- மொழியினைப் பண்பாட்டு மானுடவியல் அடிப்படையில் அடையாளப்படுத்தும் முயற்சியினை மேற்கொண்டுள்ளமை தமிழியல் ஆய்வில் ஒரு புதிய முயற்சி.
- தான் எடுத்துக்கொண்ட கருதுகோளைச் சமூகவியல், மானுடவியல், தொல்லியல், வரலாற்றியல், மொழியியல் முதலான ஆய்வு முறையியலை மேற்கொண்டு நிறுவுகிறார்.
- பேராசிரியர் தனிநாயகம் அடிகள் சமகாலத் தமிழியல் ஆய்வு குறித்த பிரக்ஞையோடு செயல்பட்டுள்ளார்.
- இவருடைய ஆய்வு, சிந்தனை மரபின் தொடர்ச்சியை வ.அய்.சுப்பிரமணியம், கைலாசபதி, சிவத்தம்பி முதலானோரிடம் காணமுடிகின்றது.
- இவருடைய ஆய்வுக்கட்டுரைகள் மேலும் பல புதிய பரிமாணங்களைத் தமிழியல் ஆய்வில் தோற்றுவிக்கின்றன.
- தமிழ்ப் பண்பாட்டு அடையாளத்தைத் தொடர்ந்து வலியுறுத்திவந்த பேராசிரியர் தனிநாயகம் அடிகளின் தமிழியல் பணிகள் அவரது காலத்திற்குப்பின் இதுநாள் வரை கண்டுகொள்ளப்படாமல் இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளமையைத் தமிழியல் ஆய்வுலகிற்கான இழப்பாகவே கருதமுடியும்.

துணைநூற்பட்டியல்

1. அந்தனிஜான் அழகரசன். *தனிநாயகம் அடிகளின் வாழ்வும் பணியும்*. இலங்கை, தங்கம் பதிப்பகம், 1984.
2. அமுதன் அடிகள். *தனிநாயகம் அடிகள்.* சென்னை, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், 1993.
3. இரா, காமராசு, (தொகுப்பாசிரியர்). *தனிநாயக அடிகளார் (1913-1980) நூற்றாண்டுவிழாக் கருத்தரங்கக் கட்டுரைகள்.* புதுதில்லி, தனிநாயக அடிகளாரின் தமிழியல் பங்களிப்பு, சாகித்திய அகாதெமி, 2017.
4. *Tamil Culture.* Volume I - XII (1952-1966). சென்னை, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், 2014.

REFERENCES

1. Anthanajan Alagarasan. *The Life and Work of Taninayagam Adikal.* Sri Lanka, Thangam Publishing House, 1984.
2. Amuthan Adigal. *Thaninayagam Adigal.* Chennai, Ulagaha Tamil Research Institute, 1993.
3. R, Kamarasu, (Editor). *Thaninayaka Adikalar (1913-1980) Centenary Seminar Papers*. Contribution of Thaninayaka Adikalar to Tamil Studies, New Delhi, Sahitya Academy, 2017.
4. *Tamil Culture*. Volume I - XII (1952-1966). Chennai, World Tamil Research Institute, 2014.